# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.61/2023** **நாள் : 14.08.2023**

**கோயம்பேடு காளியம்மன் கோயில் தெருவில் 900 மி.மீ விட்டமுடைய குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) மேற்கொள்ளப்படுவதால் 16.08.2023 அன்று மாலை 07.00 மணி முதல் 17.08.2023 மாலை 07.00 மணி வரை மண்டலம்–8, 9, 10 மற்றும் 11-க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

கோயம்பேடு காளியம்மன் கோயில் தெருவில் 900 மி.மீ விட்டமுடைய குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் ஐயப்பன் நகர் 1-வது தெரு சந்திப்பு முதல் சாய் நகர் இணைப்பு சாலை வரை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) மேற்கொள்ளப்படுவதால் 16 .08.2023 அன்று மாலை 07.00 மணி முதல் 17.08.2023 மாலை 07.00 மணி வரை மண்டலம்–8(அண்ணா நகர்), மண்டலம்-9(தேனாம்பேட்டை), மண்டலம்-10(கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம்-11(வளசரவாக்கம்)-க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம்-8 (அண்ணா நகர்) | எம்.எம்.டி.ஏ காலனி, அமைந்தகரை, அரும்பாக்கம், |
| மண்டலம்-9 (தேனாம்பேட்டை) | சூளைமேடு, நுங்கம்பாக்கம் (பகுதி), தியாகராயநகர் (பகுதி), தேனாம்பேட்டை(பகுதி) |
| மண்டலம்-10 (கோடம்பாக்கம்) | கோயம்பேடு, விருகம்பாக்கம், சாலிகிராமம், வடபழனி, கே.கே.நகர், அசோக் நகர், மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம், தியாகராய நகர் (பகுதி), சி.ஐ.டி.நகர். |

| | |
|---|---|
| மண்டலம்-11(வளசரவாக்கம்) | தாய்சா அடுக்குமாடி வளாகம் |

……2.



எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக , வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம் . மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்